# க.பொ.த (உ.த)

# தமிழ்

வடக்கு மாகாண தமிழியல துறையினரால்
2020 ம் ஆண்டு
க.பொ.த(உ.த) பரீட்சை எடுக்கும்
தமிழ்ப் பாட மாணவர்களுக்கான
இணையவழிக் கற்றல்

ஆசிரியர்:
திரு.ச.கருணாகரன்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்து யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே

## 1. அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைச்சிறப்பு எவ்வாறு விபரிக்கப்பட்டுள்ளது?

ஒருநாள், இருநாட்கள் அன்றி பல நாட்கள் ஒருவராக மட்டுமன்றி பலராகச் சொன்னாலும் முதல் நாள் போலவே வரவேற்று உபசரிப்பவன் பரிசில் பெறும் காலம் நீடித்தாலும் நீடிக்காவிடினும் அவனது கொடை நிச்சயமானது. பொய்யாகி விடாது.

(யானையின் கொம்பிடையே வைக்கப்பட்ட கவளம் யானையின் வாய்க்குள் செல்லச் சிறிது நேரம் எடுத்தாலும் அக்கவளம் யானைக்கே உரித்துடையது. அதுபோல அதியமானின் பரிசில் சிறிது பிந்தினாலும் பரிசில் நிச்சயம்.)

## 2. இச்செய்யுளில் அமைந்துள்ள உவமை அணியை எடுத்துக்காட்டி விளக்குக

**யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போல கையகத் ததுவது.**

உவமானம் - யானையின் கொம்பிடை வைக்கப்பட்ட கவளம்.

உவமேயம் - அதியமான் வழங்கும் பரிசில்.

பொதுத்தன்மை – நிச்சயம் (கிட்டும்)

# 3. பாடலின் திணை ,துறை ,பாடியவர் முதலியவற்றை எழுதுக

| | | |
|---|---|---|
| திணை | – | பாடாண்திணை |
| துறை | – | பரிசில் கடாநிலை |
| பாடியவர் | – | ஔவையார். |

நன்று என்று புளிஞர் வேந்தன் நண்ணினன் தமரை நாவாய்
சென்று இனித் தருதிர் என்ன வந்தன சிவன்சேர் வெள்ளிக்
குன்று என குனிக்கும் அம்பொன் குவடு என குபேரன் மானம்
ஒன்று என நாணிப் பல்வேறு உருவு கொண்டனைய ஆன

## 1. இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக

கங்கையின் தென்கரை சேர்க்குமாறு குகனைப் பரதன் வேண்டிய வேளையில் குகன் தன் சேனைகளுக்கு இட்ட கட்டளைப்படி நாவாய்கள் வந்த சந்தர்ப்பம்.

## 2. இச்செய்யுளில் இடம்பெற்ற உவமைகளை எடுத்துக் காட்டி விளக்குக

(3 உவமை அணிகள் உள்ளன.)

சிவஞ்சேர் வெள்ளிக் குன்றேன.

குனிக்கும் அம்பொன் குவடென.

குபேரன் மானம் ஒன்று என.

உவமானம் - வெள்ளிக் குன்று

அம்பொன் குவடு

குபேரன் மானம்.

உவமேயம் - நாவாய்கள்/படகுகள்

பொதுத்தன்மை – பன்முக வடிவம்

நிறம்

பருமன்

**3. இங்கு வெள்ளிக்குன்று, பொன்குவடு, குபேரன்மானம் எனக் குறிப்பிட்டவை யாவை?**

திருக்கைலாய மலை

மகாமேரு மலை

புட்பக விமானம்

ஏதோ அவதியிலே ஏகுகிறீர்
ஏனப்பா,
நீர்தாம் உலகு நிலை மாறிப்
பாதாளத்
தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
வாழி,என் தாழ்மை வணக்கங்கள்
ஆள் சுருளும்
வெய்யிலிலே
நீர் போகும் வீதி நடைப் பாதையிலே
உய்யும் வகை தெரியா ஓர் மனிதன்
கை இல்லான்
தூங்குகிறான் போலக் கிடக்கின்றான்
துன்புறுத்தி
வீங்கும் பசியால் வழுந்தானோ
ஆங்கயலிற்
கொத்தவரும் காகத்தைப் பாரும்
குறை உயிரோ
செத்த உடலோ - தெரியவில்லை
சற்றெனினும்
நில்லாது,நெஞ்சில் நெகிழ்வேதும் காணாது
சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு
செல்லுங்கால்
வீசிவிடுதல் விரும்பினீர்
வேண்டாம்,ஓய்
கூசும் அவமதிக்கும் கொள்கையான்
ஆசை மிக
ஆதலினால் காசு கணீரென்றிட அதிரும்
காதுடையான்
அன்னோன் கடுந்தூக்கம்
பாதியிலே
கெட்டு விடக்கூடும்
கெடுக்காதீர் பாவம்,இம்
மட்டும் புவியை மறந்திருந்தான்
கிட்டப்போய்
மெல்லக் குனிந்து இடுக
இல்லையெனில் உம்பாட்டில்
செல்க
இதுவே சிறப்பு

## 1. பிச்சைக்காரன் மீது கவிஞர் கொண்ட பரிவு எவ்விதம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

- காசினை வீசி எறிந்தால் அவனது தூக்கம் கெட்டுவிடும்.
- உலகத் துன்பம் மறந்து அவன் நிம்மதியாகத் தூங்கட்டும்.
- சில்லறையைக் கொடுக்க விரும்பின் மெதுவாகக் குனிந்து இடுக.
- அவனது தூக்கம் கெடுமாறு காசை வீசுவதிலும் பார்க்க காசினைப் போடாமலேயே செல்க.

## 2. மனிதமற்ற மனிதரைப் பார்த்து கவிஞர் எவ்வாறு ஏளனம் செய்கின்றார்?

- ஏதோ அவதியில் வருகின்றீர்.
- ஏனப்பா! நீர்தாம் உலகு நிலை மாறி பாதாளத் தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?
- சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு வீசிவிடுதல் விரும்பினீர்.
- கடகம் அவமதிக்கும் கொள்கையோன்.

## 3. சில்லறையில் ஒன்றைச் செருக்கோடு செல்லுங்கால் வீசிவிடுதல் விரும்பினீர் இவ்வரிகள் ஏற்படுத்தும் உணர்வினைச் சுருக்கமாக விளக்குக?

மனிதமற்ற மனிதர்கள் மீது வெறுப்புணர்வு.
பணம் இருப்பதனால் செருக்குடன் காணப்படுகின்றார்.

பிச்சைக்காரன் மீது - இரக்க உணர்வு.

## 4. கவிஞரின் கவித்துவம் பற்றி கருத்துரைக்குக

- மனிதநேயத்தைப் புலப்படுத்தும் வகையில் வடிவமைத்திருத்தல்.
- எளிமையான சொற்கள், சொற்றொடர்கள்.
- பேச்சோசை மிக்க சொற்கையாட்சி.
- ஓசைச் செழுமை
- கேள்விக் கணைகளைத் தொடுத்து உரையாடற் பாங்கில் அமைந்துள்ளது.
- காட்சிப் படிமம்.
- பல்வேறு உணர்வுகளை எழுப்பும் வகையில் அமைந்துள்ளமை.

அவனை இயக்கும் ஆதார சுருதி – நாகாத்தைை சற்று நேரத்திற்கு முன்னர்தான் சங்கீதத்தை அவன் செவிகளில் ‘பெய்து’ விட்டு கெண்டைக்கால், வயற்சுழியில் புதையப் புதைய லாகவ நடை போட்டுச் சென்றாள்.

சுழியில் புதைந்த அவளுடைய ஒவ்வோர் அடியும் ,சரவணமுத்துவின் பம்மிப் பருத்த மார்பைத் தாண்டிக் கொண்டு அவன் இதயத்தின் மீது ‘மலர்த்தடத்தை’ப் பதித்து,விட்டிருந்தது. ‘களுக்’ ‘களுக்’ என்ற இன்ப சுருதியோடு அவள் அடிபெயர்த்து வைத்த ஒய்யாரம் சிற்சில சமயம் சுழியில் ஆழப்புதையுண்ட தன் கால்களை அவள் மீட்பதற்குச் செய்த பிரயத்தனம் அதிலிருந்து பிறந்த பரதம் கை என்ற வாழைக்குருத்து ஒய்யார லயத்தோடு வீசித்துவண்ட கோலம் அதில் குதிபோட்ட கண்ணாடி வளையல்களின் ‘கலீர்’ ‘கலீர்’ என்ற சங்கீதம் பனையோலைப் பெட்டியைத் தாங்கியிருந்த அந்தத் தலையின் கலைக்கோலம் ஏதேச்சையாக நெற்றியில் விழுந்து கிடந்த கூந்தல் இழைகள் ,அள்ளி முடித்திருந்த கொண்டைக்குத் திரு‘டி பட்டு விடாமல் ‘கவசம்’போல் காத்து நின்ற முக்காடு தளிர் மேனியை இறுக்கிப் பற்றியிருந்த சட்டை பாதி வயிறு வெளியில் தெரிய முந்தானையை இடுப்பில் அள்ளிச் செருகியிருந்த காம்பீர்யம் இவையெல்லாம் சேர்ந்து சரவணமுத்துவைப் ‘பாடு பாடு’ என்று பணித்தன.

## 1. நாகாத்தை மீது சரவணமுத்து கொண்ட காதல் எவ்வாறு புலப்படுத்தப்பட்டுள்ளது?

சரவணமுத்துவை இயக்கும் ஆதாரசுருதி நாகாத்தை.
அவள் நடந்து செல்வதை அவன் இரசித்தல்.
நாகாத்தையின் அந்த இலாவண்யங்களையும்,
நடையின் ஒய்யாரத்தையும் கண்டு மனம்
கிறுகிறுத்தல்.
(விளக்கி எழுதுதல்)

## 2. கூத்துடன் தொடர்புபட்ட விபரணங்களாக இப்பகுதியில் இடம்பெற்ற விடயங்களை எழுதுக

ஆதார சுருதி நாகாத்தை
சங்கீதத்தை மெய்த்துவிடல்
சுழியில் புதையுண்ட கால்களை மீட்பது பரதம்.
கண்ணாடி வளையல்களின் கலீர் கலீர் என்ற
ஓசை – சங்கீதம்.

## 3. ஆசிரியர் பயன்படுத்தும் உவமை,உருவக அணிகளை எடுத்துக்காட்டி அவற்றின் சிறப்பை விளக்குக

உவமை அணிகள்.

கவசம் போல் காத்து நின்ற முக்காடு

தளிர் மேனி.

உருவக அணி

கை என்ற வாழைக்குருத்து.

# 4. ஆசிரியரின் மொழிநடை பற்றி கருத்துரைக்குக

- எளிமையான யதார்த்தமான மொழிநடை.
- உவமை உருவகங்களைப் பயன்படுத்துதல்.
- வருணனைப் பாங்கு.
- வடமொழிச் சொற்களின் பயன்பாடு.
- சிறிய சிறிய வசனங்களைப் பயன்படுத்துதல்.
- அதீத உணர்ச்சிக்கு ஆட்படாத பாத்திரச் சித்தரிப்பு.

## பெரியோரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தை துணையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக

1. பெரியாரது இலக்கணமும் அவர்களைத் துணைக்கோடலும்
2. பெரியோரைத் துணைக் கொள்வதன் சிறப்பும் பயனும்
3. பெரியோரைத் துணைக் கொள்ளாமையால் ஏற்படும் குற்றம்
4. உவமை அணிப் பயன்பாடு

# 1. பெரியாரது இலக்கணமும் அவர்களைத் துணைக்கோடலும்

- அறத்தினது நுட்பங்களை நூல்களைக் கற்றும் உய்த்துணர்ந்தும் கொள்பவராய் இருத்தல் வேண்டும். அறிவு, ஒழுக்கம், காலம் என்பவற்றால் முதிர்ந்தவராய் இருத்தல்.
- தனக்கு வந்த துன்பங்களை நீக்கும் வழியறிந்து நீக்கி பின்னரும் அத்தகைய துன்பம் ஏற்படாமல் முன்னரேயறிந்து காக்கவல்ல இயல்புடையவர்.
- அத்தகைய இயல்புடைய பெரியோரை அரசன் துணையாகக் கொள்ளவேண்டும்.

**அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை**
**திறனறிந்து தேர்ந்து கொளல்.**

**உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

## 2. பெரியோரைத் துணைக் கொள்வதன் சிறப்பும் பயனும்

சிறப்பு:

- பெரியாரைப் போற்றிப் பேணி தமராகக் கொள்ளுதல் அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அரியதாகும்.
- அரசனுக்குரிய பொருள், படை, அரண் ஆகிய வல்லமை எல்லாவற்றுள்ளும் சிறந்தது.
- அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு ஆட்சி நடாத்துதல்.

பயன்:

- தகுதி வாய்ந்த பெரியோரை இனத்தவராகக் கொண்டு தானும் ஒழுகவல்ல அரசனை அவன் பகைவர் செய்யக்கூடிய தீமை யாதும் இல்லை.
- அரசரைக் கெடுக்கும் ஆற்றலுடைய பகைவர் யாரும் இல்லை.

**அரியவற்று ளெல்லாம் மரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.**

**தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்**
**வன்மையு ளெல்லாந் தலை.**

# 3. பெரியோரைத் துணைக் கொள்ளாமையால் ஏற்படும் குற்றம்

- தன் தவறுகளை இடித்துரைத்து திருத்துவோரைத் துணையாகக் கொள்ளாத அரசன் தன்னைக் கெடுக்கவல்ல பகைவர்கள் இல்லாமலேயே (தானே) கெட்டழிவான்.
- தம்மைத் தாங்கிக் காப்பாற்றவல்ல துணையில்லாத அரசர்க்கு நிலைத்த வாழ்வு இல்லை.
- பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைச் சம்பாதிப்பதை விட பத்துமடங்கு தீமையானது.

சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைக் சூழ்ந்து கொளல்.

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

இடிக்குந் துணையாரை யாள்வரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

# 4. உவமை அணிப் பயன்பாடு

அரசன் தன் பொறுப்புக்களோடு நிலைத்த வாழ்வு பெறவேண்டுமாயின் பெரியாரைத் துணையாக்கிக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த உவமை அணி கையாளப்பட்டுள்ளது.

முதலைப் பெற்றே இலாபம் பெறவேண்டும். அது போலவே தாங்குவாரை (பெரியாரை) பெற்றே நிலைபெற வேண்டும்.

**பரதன் சேனையுடன் வருவதனை குகன்காண்பது முதல் தன் வேடுவ வீரர்களுக்கு வீர வார்த்தைகள் உரைத்தது வரையுள்ள பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக**

(அ) குகனது சீற்றம்

(ஆ) குகன் சேனைகளுக்க இட்ட கட்டளை

(இ) குகனது வீர வார்த்தைகள்

(ஈ) நான்கு உவமை அணிகளைக் குறிப்பிட்டு விளக்குக

## (அ) குகனது சீற்றம்

- பரதனின் சேனை இராமனுடன் போர் செய்யவே வந்துள்ளது என நினைத்து கோபம் மேலிட்டவனாய் கங்கையின் தென்கரைக்கு வந்து நின்றான்.
- இயமனை ஒத்த குகன் பரதசேனையை நோக்கி இகழ்ச்சிச் சிரிப்புடன், கண்கள் நெருப்புக் கக்க, மூக்கிலிருந்து கோபத்தால் புகைவர, கோபத்தால் வளைந்த புருவமாகிய போர்வில்லை உடையவனானான்.
- உயிர் கவரும் இயமனே ஐந்து லட்சம் வடிவு எடுத்தாற் போன்ற வலிய உடம்பினையும் சேனையையும் உடைய குகன் கட்டிய உடைவாள், கடித்த உதடு, கடுமையான சொற்கள், கோபக் கனல் பொங்கும் கண்கள், அடிக்கப்படும் உடுக்கு, ஒலிக்கப்படும் ஊதுகொம்பு என்பவற்றை உடையவனானான்.
- பரதசேனை எலியாகும். நான் இவற்றை அழிக்கின்ற பாம்பாவேன் என்று வீரவசனம் பேசினான்.

அப்படை கங்கையை அடைந்த ஆயிடை,
துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணலோடு உடற்றவே கொலாம்
இப்படை எடுத்தது? என்று, எடுத்த சீற்றத்தான்.

குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகை மிக, கண்கள் தீ நாற, நாசியில்
புகை உற, குனிப்புறும் புருவப் போர்விலான்.

மை உற உயிர் எலாம் இறுதி வாங்குவான்
கை உறு கவர் அயில் பிடித்த காலன்தான்
ஐ - ஐநூறாயிரம் உருவம் ஆயின
மெய் உறு தானையான், வில்லின் கல்வியான்.

கட்டிய கரிகையன், கடித்த வாயினன்,
வெட்டிய மொழியினன், விழிக்கும் தீயினன்,
கொட்டிய துடியினன், குறிக்கும் கொம்பினன்,
“கிட்டியது அமர்” எனக் கிளறும் தோளினான்.

## (ஆ) குகன் சேனைகளுக்கு இட்ட கட்டளை

- என் உயிர்போலும் இராமன் ஆட்சியைப் பெறாமல் தடுப்பதற்காக வடகரையில் வந்து நிற்கும் பரதனின் சேனைகளை அழித்து சுவர்க்கம் அனுப்ப எண்ணியுள்ளேன். அதற்கு நீங்கள் உடன்படுவீர்களாக.
- போர்ப்பறைகளை அடியுங்கள். பரதசேனை தென்கரை வருவதற்கான வழிகளை அடையுங்கள், தோணிகள் ஒன்றையும் ஓட்டாதீர்கள், தாமாக வருபவர்களைப் பிடியுங்கள், அவர்களை இறக்கும்படி அழியுங்கள்.

**துடி எறி நெறிகளும், துறையும், சுற்றுற**
**ஓடி எறி அம்பிகள் யாதும் ஓட்டலிர்**
**கடி எறி கங்கையின் கரை வந்தோர்களை**
**பிடி எறி, பட எனா பெயர்த்துக் கூறுவான்.**

# (இ) குகனது வீர வார்த்தைகள்

- நெருப்பை உமிழும் என் சிவந்த அம்புகள் இவர்கள் மேற் செல்லாது விடுமோ?
- பெருஞ்சேனை கண்டு புறமுதுகிடும் வில்வீரன் நானோ?
- இராமர், இலக்குமணன் பற்றி எண்ணாமல் என்னையும் மதிக்காமல் போருக்கு வந்தவர்கள் எனது எல்லை கடந்து சென்றால் அல்லவா போர் செய்ய முடியும். வேடர் விடும் அம்பு அரசர் மார்பினைத் துளைக்காதோ?
- இராமன் மீது படையெடுப்பது தம்முடைய அரிய உயிர்களையும், சேனைகளையும் எனக்குத் தப்பிக்கொண்டு சென்றால் அல்லவா?
- இராமன் அருந்தவம் செய்ய இப் பரதன் உலகை ஆள்வானோ?
- யானைகள், குதிரைகள் நெருங்கிய இவர்களது பெரும் படையின் ஆற்றல் கங்கையாற்றைக் கடந்து போனபின் அல்லவா தெரியும்.
- நமது வீரர்களது ஒரு வேளைப் போருக்கும் பரத சேனை பற்றாது. என் வில் அம்புமழை சொரிய எதிர்ச் சேனையை நிலைகுலைக்காமல் விடுவேனோ?
- பரத சேனையை நான் கொன்று குவித்து பிணங்களைக் கங்கை நீர் இழுத்துச்சென்று கடலினைத் தூர்த்து விடாதோ?
- அசையும் கொடிகளையுடைய சேனைகளைக் கொன்றழிப்பேன்.
- ஏழு கடலளவு சேனை என்றாலும் பசுமுன் தின்னக்கிடந்த புல் எனும்படி அனைத்தும் அழிந்து போகாதோ?

அஞ்சன வண்ணன் என் ஆர்
உயிர் நாயகன், ஆளாமே,
வஞ்சனையால் அரசு எய்திய
மன்னரும் வந்தாரே!
செஞ் சரம் என்பன தீ
உமிழ்கின்றன, செல்லாவோ?
உஞ்சு இவர் போய்விடின், நாய்க்குகன்
என்று எனை ஓதாரோ?

ஆழ நெடுந்திரை....

## (ஈ) நான்கு உவமை அணிகளைக் குறிப்பிட்டு விளக்குக

**நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணல்.**

உவமானம் - கருமேகம்
உவமேயம் - இராமன்
பொதுத்தன்மை – கருணை

**கூற்றின் ஆற்றலான்**

உவமானம் - கூற்றுவன்
உவமேயம் - குகன்
பொதுத்தன்மை – வீரபராக்கிரமம்

**கடையுகம் தனில் அரனி மாமழை கருங்கடல் கிளர்ந்தென**

உவமானம் - மேகமும் கடலும் சேர்தல்
உவமேயம் - படைகளுடன் குகன் நிற்றல்
பொதுத்தன்மை – ஆர்ப்பரிப்பு

**மொய்புலி அன்னான்**

உவமானம் - புலி
உவமேயம் - இலக்குவன்
பொதுத்தன்மை - வீரம்

**தேம்பாவணி காட்சிப் படலத்தில் சாந்தி மரியாள் இருவருக்கும் இடையிலான உரையாடற் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக**

1. சாந்தியின் வினாக்களில் காணப்பட்ட இயேசு எளியனாக வந்த தன்மை
2. சாந்தியின் வினாக்களுக்கு மரியாள் அளித்த பதில்கள்
3. இறைவனின் பெருமைகள்
4. உவமை,உருவக அணிகளை கையாள்வதில் வீரமாமுனிவரின் ஆற்றல்

## 1. சாந்தியின் வினாக்களில் காணப்பட்ட இயேசு எளியனாக வந்த தன்மை

- அரசர்க்குரிய படைபலங்கள் எதையும் வேண்டாதவர்
- உலகையே தன் ஆணையின் கீழ் ஆண்டவனாக இருந்தபோதிலும் சாதாரண அரசர்க்குரிய செல்வங்கள், மாடமாளிகைகள், ஆபரணங்கள் எதையும் வேண்டாதவர்.
- வல்லமை பொருந்திய வானுலக உருவில் வராமல் குடியிருக்கும் இல்லம் இன்றி மாட்டுத் தொழுவத்தில் பிறந்தவர்.
- உலகத் தந்தையாகிய ஆண்டவனாக இருந்தபோதிலும் மனித குலத்தில் தானும் ஒருவனாகப் பிறந்தவர்.

கொல்லும் வேலொடும் கூர்நெடும் வாளொடும்
வில்லும் வாளியும் ஆழியும் வில்செய,
ஒல்லும் ஆழி உருட்டிடக் கோன்துணை
செல்லும் வீரவெஞ் சேனைஇலா யதுஏன்?

ஆயவான்மணி ஆர்ந்து அணி உச்சியால்
காய நெற்றி கடந்து உயர் மாடமும்,
தூய பொன்னொடு சுழ்சுடர் பூணும் இத்
தேய வேந்தர் தம் செல்வமொன்று இல்லதேன்?

# 2. சாந்தியின் வினாக்களுக்கு மரியாள் அளித்த பதில்கள்

- தனித்து நின்று பகைவரை வெல்ல முடியாதவர் தான் அம்பு முதலான படைக்கலங்களால் பகைவரை தாக்கக் கூடிய வீரர்களைத் துணைக்கொள்வர்.

- மழை வெள்ளம் உலகைமூடி மறைத்தாலும் அக்கினியால் சோதோம் முதலான நகரங்கள் எரிந்து அழிந்ததும் ஏனைய செயலிகளும் என தொகை சொல்லிக்காட்ட முடியாது.

**அம்பினால் அபயர் செயும் அத்துணை**
**நம்பினார், தனி நற்செய்கை ஈடிலார்**
**கொம்பில் ஏறும் இடைத்துவளும் கொடி**
**எம்பிரான் வலிக்கு இத்துணை வேண்டுமோ?**

**யாவரும் கடிது அஞ்சலொடு எஞ்சுவான்**
**மீவரும் துளி மேதினி மொய்த்ததும்,**
**தீவரும் துளி ஐம்புரம் தீந்ததும்**
**தூவரும் பல வும்தொகை சொற்றவா?**

# 3. இறைவனின் பெருமைகள்

- எதிர்காலத்தில் நடக்க விருப்பதை முன்னர் நடந்தது போல் அறிந்து கொள்ளக் கூடியவர்.
- வானத்தின் மீதிருந்து தனியரசு செலுத்தும் செங்கோல் உடையவர்
- தன் துணையல்லாது வேறு எந்த அரசர்களுக்குரிய படைபலங்கள், வீரர்கள் எதுவும் வேண்டாதவர்.
- தனி ஒருவராக நின்று பகைவரைத் தாக்கி வெல்வதற்குரிய வல்லமையுடையவர்.
- தான் செய்ய விரும்பிய செயலை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிக்கும் வல்லமை உடையவர்.
- சினமாகிய நெருப்பு மூண்டுவிட்டால் அதை எவராலும் முறியடிக்கவியலாத தன்மையன்
- ஊழிக்காலத்தின் போது முன்னர் சோதோம் முதலான ஐந்து நகரங்களை எரித்தழித்தவன்.
- முடிவு என்று ஏதுவும் இல்லாதவன்.
- வேதங்கள் கூறியபடி தாயும் தந்தையும் இல்லாது தானாய்த் தோன்றியவன்.

# 4. உவமை,உருவக அணிகளை கையாள்வதில் வீரமாமுனிவரின் ஆற்றல்

**உவமை அணி - மலர் வாய் திறந்து**

உவமானம் - மலர்
உவமேயம் - மரியாளின் திருவாய்
பொதுத் தன்மை - இனிமை. மென்மை

**இடது வாளும் கொடி கொம்பில் ஏறும், தனிநல் செய்கை, ஈடுஇலார் அன்பினால்அபயர் செய்யும் அத்துணை நம்பினார்.**

உவமானம் - கொம்பினால் ஏறும் கொடி
உவமேயம் - வீரர் துணையை நம்பியிருப்பவர்.
பொதுத்தன்மை - தனித்து இயங்க முடியாமை, வலிஇன்மை

**கூறுவாள் செயும் கொள்கையின்....**
**வாளெடுத்த கண் மாதொடு....**
**தாள் எழும் கமலம் சுடர்தாவிய கோள் எழும் கதிர் கொண்டு என...**

**உருவக அணி**

இன்ப நெடுங்கடல் - இன்பம் நீண்ட கடலாக உருவகிக்கப்பட்டுள்ளது.
உடு முடியாள். - ஒளிமிகுந்த உடுக்களைச் சூடியுள்ள மரியாள்...

**கவிஞர் இ.முருகையனின் இரு துயரங்கள் என்னும் நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவன வெளிப்பட்டிருக்குமாற்றை விளக்குக**

(அ) ஒவ்வொருவர் துயரமும் அவரவர்க்கு வலியானது

(ஆ) பாமாவின் துரோகத்தனம்

(இ) நெறியாளரின் பங்களிப்பு

(ஈ) ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பு

## (அ) ஒவ்வொருவர் துயரமும் அவரவர்க்கு வலியானது

- டாக்டர் கந்தப்புவின் பிள்ளையின் அகால மரணம்
- மனோகரனின் மனைவி பாமா கள்ளக் காதலனுடன் ஓடிப்போன துயரம்
- ஒவ்வொருவரும் தமது துயரத்தையே பெரிதாக எண்ணுதல்.
- இருவரது துயரங்களையும் உரையாடலிலிருந்து எடுத்துக்காட்டி விளக்குதல்.

# (ஆ) பாமாவின் துரோகத்தனம்

- மனோகரனின் மனைவி பாமா தனது கள்ளக் காதலனான பஞ்சாட்சரத்துடன் ஓடிப்போதல்.
- பாமாவின் மீது மனோகரன் கொண்டிருக்கும் அன்பு. (எடுத்துக்காட்டல்)
- கணவனை அன்பு செய்யாமல் நோயென நடித்து டாக்டர் வீட்டுக்கு அனுப்புதல்.
- மனோகரன் வாயிலாகத் துரோகத் தன்மை எடுத்துக் காட்டப்படுதல்.

உதாரணம் - ஏனிந்தப் பசப்பும் பாசாங்கும்.
ஏனிந்த சூதும் சதியும்.

## (இ) நெறியாளரின் பங்களிப்பு

- நாடகக் கதையை அறிமுகஞ் செய்தல்
- நாடக நிறைவில் மேடையில் தோன்றுதல்.
- கந்தப்பு, மனோகரன் இருவரதும் துயரங்கள் குறித்து எடுத்துக் கூறல்.
- அவற்றின் நியாயப்பாடுகளைச் சபைக்கு விளக்குதல்.
- டாக்டர் கந்தப்புவின் துயரத்தை தெளிவுபடுத்த முனைதல்.
- நாடகத்தை நிறைவுசெய்தல்.

## (ஈ) ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பு

- யதார்த்தமான யாழ்ப்பாண பேச்சுத்தமிழ் பயன்பாடு
- சிறு சிறு வாக்கியப் பயன்பாடு
- மொழிபெயர்ப்பு நாடகத்துக்கு ஏற்ப பொருத்தமான ஆங்கிலச் சொற் பயன்பாடு.
- உணர்ச்சிச் செறிவான சொற் பயன்பாடு.
- உவமை உருவக அணிப் பயன்பாடுகள்.
- உதாரணம் : கூத்து மேடைக்குப் பந்தல் காலாய் நிண்டு சுமக்கச் சொல்லுறீர்.
- உம்முடைய வீணையை எடுத்து கருணா ரசம் ததும்ப ஒரு கீர்த்தனையை எடுத்து எறியும்.

## புதுமைப் பித்தனின் ‘தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை’ என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக

1. நாகரிகம் என்பதற்கு ஆசிரியர் தரும் விளக்கம்
2. கிராம மக்களின் சிறப்புக்கள்
3. நகர வாசிகள் கிராமத்திற்கு சென்றாலும் கிராம வாழ்வை வாழ மாட்டார்கள் என்பதற்கு ஆசிரியர் தரும் நியாயப்பாடுகள்
4. கட்டுரையாசிரியர் பயன்படுத்திய உத்திகள்

## 1. நாகரிகம் என்பதற்கு ஆசிரியர் தரும் விளக்கம்

- சமுதாயம் இற்றுப் போகாமல் இருக்க எடுத்துச் சேர்த்த ஞாபகங்களின் தொகுப்பு.
- சமுதாயம் நடந்துவந்த பழக்கப்பட்ட பாதை.
- இதுவரை இருந்து வருவதற்கு உயிர் கொடுப்பது.
- நாம் வாழ்வதற்கும் சுக அனுபவங்களைப் பெறவும், உள்ளத்தால் எழும் நினைவுகளுக்கும் அடிநாதமாக இருப்பது.

## 2. கிராம மக்களின் சிறப்புக்கள்

- கிராமத்தில் சுகம் கிடைக்கும்.
- திசைமாறித் திரிவோர்க்கு அன்னசத்திரமாக காணப்படும்.
- விருந்தோம்பல் பண்பு.
- தனிமை வாழ்க்கை இல்லை. அனைவரையும் இணைத்துக்கொள்ளும் பண்பு.
- இயற்கை அனர்த்தங்களையும் நண்பர்களாகப் பாவித்து அவற்றுடன் சேர்ந்து அவற்றை வசப்படுத்தி வயலில் வளத்தைப் பார்க்கும் பண்பு.
- இறை நம்பிக்கை.(பிள்ளையார் கோவில், )

## 3. நகர வாசிகள் கிராமத்திற்கு சென்றாலும் கிராம வாழ்வை வாழ மாட்டார்கள் என்பதற்கு ஆசிரியர் தரும் நியாயப்பாடுகள்

- நகர வாழ்க்கையை கிராமத்தில் வாழ விரும்புவர். மோட்டார் கார், வைரக்கல் அணிந்த மனைவி, விட்டமின் மாத்திரைகள், திருக்குறள் உபாசணை என்பவற்றுடன் தான் இவர்கள் கிராமத்தில் குடியேறுவார்கள்.
- பத்திரிகை, பழக்கூடை என்பன நகரத்தில் / பட்டணத்தில் இருந்து வரும்.
- ஆறு நிறையத் தண்ணீர் இருந்தாலும் வெந்நீரில் தான் குளிப்பர்.
- பிளானல் சட்டை போட்டு, வெள்ளைப்பூண் தடியோடு உலாவுவர்.

# 4. கட்டுரையாசிரியர் பயன்படுத்திய உத்திகள்

- எளிமையான மொழிநடை
- வருணனைப் பாங்கு
- பேச்சுவழக்குச் சொற்களின் பயன்பாடு.
- மணிப்பிரவாள நடை
- என்னல் தன்மை, நகைச்சுவை, அஞ்சுதம்
- நிறைந்த மொழிநடை
- ஏனைய இலக்கிய ஆதாரங்களைப் பயன்படுத்தியமை